DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT & SESSIONS COURT,THENI.
Case No:S.C.53/2022
Prosecution Witness P.W.2

| | |
|---|---|
| Name : **திரு.ஜெகதீஷ்** | Caste: |
| Father's Name :**திரு.** | Calling : |
| Village: | Religion : |
| Taluk : | Age: |

**எதிரிகள் 1 முதல் 5 மற்றும் 8 ஆஜர், 6வது எதிரி இறப்பு, 7வது எதிரி ஆஜரில்லை அவருக்காக மனுத்தாக்கல் செய்யப்பட்டது.**

**நாள்: 06.10.2025.**

(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார் )

**முதல் விசாரணை**

1. நான் ஆண்டிப்பட்டி அணைக்கரைப்பட்டியில் குடியிருந்து வருகிறேன், விவசாயம் செய்கிறேன். இறந்து போன நவீன் குமார் எனக்கு பங்காளி முறை, எனக்கு நெருங்கிய நண்பர். சாட்சி அர்ஜுனன் எனது மாமா மகன், அவர் பெருமாள் பட்டியில் குடியிருந்து வருகிறார். தைப்பொங்கல் தினம் என்பதால் எங்கள் ஊருக்கு அவர் வந்திருந்தார். எனக்கு நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ள எதிரிகள் அனைவரையும் எனக்கு தெரியும். எனக்கு இறந்து போன நவீன் குமார் மூலமாக அவர்களை தெரியும், அவர்கள் பக்கத்து ஊரான குள்ளப்புரத்தை சேர்ந்தவர்கள். இறந்து போன நவீன் குமார் எதிரிகள் ஊரான குள்ளபுரத்திற்கு அடுத்து உள்ள விவசாயக் கல்லூரியில் வேலை செய்து வந்தார்.

2. கடந்த 15.01.2021 ஆம் தேதியன்று பொங்கல் திருநாள் அன்றைய தினம் நவீன்குமாருக்கு கல்லூரி விடுமுறை என்பதால் நாங்கள் எப்போதும் மது அருந்துவது வழக்கம். பொங்கலுக்கு மறுநாள் என்பதால் எங்கள் ஊருக்கு பக்கத்தில் உள்ள சுடுகாட்டிலும், எங்கள் ஊருக்கு பக்கத்து ஊரைச் சேர்ந்த குள்ளபுரத்தில் இருந்த அமாவாசை, பரமசிவம் ஆகியோருக்கு சொந்தமான

குடிசையில் உட்கார்ந்து நாங்கள் மது அருந்துவது வழக்கம். அம்மாவாசை மற்றும் பரமசிவம் ஆகியோருக்கு சொந்தமான குடிசையில் நேசமணி மற்றும் செல்வமணி ஆகியோர்களுக்கு சொந்தமான டிப்பர் லாரி மற்றும் கோழிகளை பராமரித்து வந்தார்கள் என்ற வகையில் நாங்கள் அங்கு அடிக்கடி சென்று வரும் வகையில் எதிரிகள் அனைவரும் எனக்கு அங்கு பழக்கம்.

3. கடந்த 15.01.2021 ஆம் தேதியன்று காலை நவீன் குமார் அமாவாசை மற்றும் பரமசிவம் ஆகியவர்களது குடிசைக்கு வழக்கம் போல சென்றுள்ளார். நான் அப்போது அவருடன் செல்லவில்லை, நவீன் சொல்லி அந்த நிகழ்வு எனக்கு தெரிய வந்தது. நாய் ஒன்று நவீன்குமாரை பார்த்து குழைத்துள்ளது. அப்பொழுது நவீன்குமார் அந்த நாயை எத்துவதற்குத்துற்கு சென்றுள்ளார். அங்கிருந்து அம்மாவாசை மற்றும் பரமசிவம் இருவரும் நவீன் குமாரை நாயை அடிக்கக் கூடாது என திட்டி உள்ளார்.. உடனே நவீன் குமார் அவ்வாறு சொல்லக்கூடாது என்றும், குடிசையை "தீ" வைத்து கொளுத்தி விடுவேன் என சத்தம் போட்டு உள்ளார். அதன்பிறகு நவீன் குமார் ஊருக்கு திரும்பி வந்துள்ளார்.

4. அன்றைய தினம் மாலை 06.00 – 6:30 மணி அளவில் நான் எனது மாமா மகன் அர்ஜுனன், புதூரைச் சேர்ந்த சசிகுமார், இறந்து போன நவீன் குமார் ஆகிய நால்வரும் எங்கள் ஊரில் உள்ள சுடுகாட்டு நிழற்குடையில் உட்கார்ந்து நாங்கள் மது அருந்தி கொண்டிருந்தோம், அப்போது நவீன் குமாருக்கு மாலை 6:30 மணியளவில் ஒரு போன் வந்தது. அப்போது நவீன்குமார் அந்த போனில் சத்தமாக கோபித்துக் கொண்டு பேசினார், போன் பேசி முடித்த பிறகு நான் நவீன்குமாரிடம் என்னவென்று விசாரித்தபோது நவீன் குமார் காலையில் அம்மாவாசை குடிசைக்கு சென்றதும் அங்கு நிகழ்ந்த நிகழ்வுகளையும் என்னிடம் விளக்கி சொன்னார். நேசமணி, செல்வமணி மற்ற நபர்கள் அம்மாவாசை குடிசைக்கு சென்றபோது அவரது தாத்தா அங்கு நடந்த நிகழ்வுகளை நேசமணியிடம் தெரிவித்துள்ளார்.

5. நேசமணி, நவீன் குமாருக்கு போன் செய்து தன்னை திட்டியதாக நவீன் குமார் என்னிடம் தகவல் சொன்னார். நான் அதை பெரியதாக எடுத்துக் கொள்ளவில்லை, வழக்கம் போல நண்பர்களுக்கிடையே நடக்கும் சண்டை என விட்டு விட்டோம். நாங்கள் தொடர்ந்து மது அருந்தி கொண்டிருந்தோம், காலை சுமார் 7.45 – 8.00 மணியளவில் இரண்டு பைக்கில் நேசமணி, செல்வமணி, கார்த்திக், தங்கப்பாண்டி, முத்துமாரி, சிவக்குமார் எங்கள் ஊரைச் சேர்ந்த மனோஜ்குமார், பிரபு பாண்டி நான்கு, நான்கு நபர்கள் சேர்ந்து இரண்டு வண்டியில் மொத்தம் எட்டு பேர் அங்கு வந்தார்கள். எங்கள் ஊரைச் சேர்ந்த மலைச்சாமி மகன் மனோஜ் குமார் இங்க தான் இருக்கிறார்கள் அடித்து கொள்ளுங்கள் என மற்ற எதிரிகளிடம் சொல்ல அவர்கள் வண்டியை நிப்பாட்டி விட்டு வந்து நேசமணி, நவீன்குமாரிடம் எனது தாத்தாவிடம் இவ்வாறு பேசிவிட்டு சென்று உனது ஊருக்கே வந்துள்ளேன் என்ன செய்ய முடியும் என கேட்டார். உடனே நவீன் குமார் நேசமணியிடம் உங்கள் ஊருக்கே வந்து உங்கள் வீட்டிலேயே நான் செய்வேன் என மீண்டும் பேசினார்.

6. இரு தரப்பினருக்கும் இடையே வாக்குவாதம் அதிகம் ஏற்பட்டு நிழற்குடையில் நின்று கொண்டிருந்த நவீன் குமாரை நேசமணி கையால் அடித்து கீழே தள்ளினார். மல்லாக்க கீழே விழுந்த நவீனை ஒரு பக்கம் அவரது மாமா சிவகுமாரும், மற்றொருபுறம் அவரது தம்பி செல்வமணியும் பிடித்துக் கொள்ள நேசமணி, நவீன்குமாரின் மேல் ஏறி உட்கார்ந்து அவர் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து கொண்டு இடது பக்க மார்பு நடுப்பக்க மார்பு மற்றும் தலையின் பின்புறம் ஆகிய மூன்று இடங்களில் கத்தியால் நேசமணி குத்திவிட்டார்.

7. மற்ற எதிரிகள் ஏழு பேரும் என்னையும், அர்ஜுனனையும் நாங்கள் நவீன்குமாரை தடுக்க கூடாது என்பதற்காக எங்களை பிடித்துக் கொண்டார்கள். நான் நவீன் குமாரை காப்பாற்றுவதற்கு அவர்களை தாண்டி உள்ளே சென்றவுடன் கார்த்திக் என்ற எதிரி தான் வைத்திருந்த கத்தியை எடுத்து வந்து

எனது கழுத்தில் குத்த வந்தார், நான் லேசாக திரும்பிக் கொண்டேன் அந்த கத்தி எனது இடது பக்க தலையின் பின்புறம் பட்டது. அந்த கத்தியை எனது தலையிலிருந்து மீண்டும் கார்த்தி அந்த கத்தியை பிடுங்கி என் மீது வீசும் போது எனது மூக்கு மற்றும் கன்னத்தில் அந்த கத்தி கிழித்துக்கொண்டு சென்றது. அங்கிருந்த எல்லோரும் சேர்ந்து என்னையும், அர்ஜுனனையும், சசிகுமாரையும் அங்கிருந்த கல் ஆகியவற்றை எடுத்து எறிந்து பிரச்சனை செய்தார்கள். நேசமணி மற்றும் கார்த்திக் இருவரும் நாங்கள் பக்கத்தில் வந்தால் குத்துங்கடா என மற்றவர்களிடம் சொன்னார்கள். அங்கிருந்து சசிகுமார் மட்டும் தப்பித்து ஊருக்குள் ஓடிச் சென்று தகவல் சொன்னார்கள்.

8. அன்றைய தினம் பொங்கல் திருவிழா என்பதால் எங்கள் ஊரில் குழந்தைகளுக்கு போட்டி நடத்தி பரிசு கொடுத்து வந்தார்கள். சசிக்குமார் அங்கு ஓடி சென்று அங்கிருந்த நவீன் குமாரின் தந்தை பழனிச்சாமி, எனது பெரியப்பா கண்ணன் மற்றும் அங்கிருந்த ஊர் மக்களிடமும் இவ்வாறு வந்து குத்து விட்டார்கள் என தகவல் சொல்லி ஊர்க்காரர்களை அழைத்து வந்தார். ஊர்க்காரர்கள் வருவதை பார்த்துவிட்டு நேசமணி, செல்வமணி, கார்த்தி, பிரபு பாண்டி, தங்கபாண்டி, எங்கள் ஊரைச் சேர்ந்த மனோஜ்குமார், முத்துமாரி, மாமா சிவகுமார் ஆகியோர்கள் அனைவரும் ஊரில் இருந்து வருபவர்களை பார்த்து விட்டு வந்த பைக்கில் ஓடி விட்டார்கள்.

9. எங்கள் ஊரில் இருந்து வந்த பழனிச்சாமி, பெரியப்பா கண்ணன் ஊர் பொதுமக்கள் எல்லோரும் சேர்ந்து அங்கு படிக்கட்டில் இருந்த நவீன் குமாரையும், ரத்த வெள்ளத்தில் இருந்த என்னையும், சாட்சி அர்ஜுனனையும் இடது பக்கம் கழுத்திற்கு கீழ் அர்ஜுனனுக்கு காயம் ஏற்பட்டிருந்தது எங்களை ஊருக்குள் தூக்கிச் சென்றார்கள். நவீன் குமார் மட்டும் மிகவும் உடல் நிலை பாதிக்கப்பட்டு இருந்தார். எங்கள் ஊரில் ஜே.பி என்ற மினி லோடு வண்டி உள்ளது அந்த வண்டியில் நவீன் குமார் முதலில் ஏற்றி அனுப்பிவிட்டு க.விலக்கு மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றார்கள் அதன் பிறகு என்னையும்,

அர்ஜுனன், சசிகுமார் ஆகிய மூவரையும் அங்கு வழிப்போக்காக வந்த ஒரு ஆட்டோவை நிறுத்தி எங்கள் மூவரையும் ஆண்டிப்பட்டி அரசு மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றார்கள். எங்கள் மூவருக்கும் முதல் உதவி சிகிச்சை அளித்து எனக்கும், அர்ஜுனனுக்கும் அதிக காயங்கள் இருந்த காரணத்தினால் எங்கள் இருவரையும் க.விலக்கு அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள்.

10. சசிகுமாருக்கு சிறிய காயம் என்பதால் அவர் எங்களுடன் க.விலக்கு மருத்துவமனைக்கு வந்தார் ஆனால் அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்படவில்லை. க.விலக்கு மருத்துவமனையில் நாங்கள் சேர்ந்த பிறகு நவீன்குமாரின் தந்தை மருத்துவமனைக்கு வந்தார். நான் நவீன் குமாரை பற்றி அவரிடம் விசாரித்தேன். வரும் வழியில் நவீன் குமார் இறந்ததாக அவர் செய்தி சொன்னார். அவர் என்னிடம் நடந்த விபரங்களை விசாரித்தார், நான் நடந்த விபரங்களை தெரிவித்தேன். என்னிடம் தகவல்களை கேட்டு தெரிந்து கொண்டு அவர் ஆண்டிப்பட்டி காவல் நிலையம் சென்று புகார் தெரிவிப்பதாக சொன்னார்.

11. நான் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த பொழுது நீதித்துறை நடுவர் வந்து எனது வாக்குமூலத்தை பதிவு செய்தார்கள், நான் வாக்குமூலம் அளித்தேன். அதன் பிறகு போலீசார் என்னை வந்து விசாரணை செய்தார்கள். நான் நீதித்துறை நடுவர் முன்பு கொடுத்த மரண வாக்குமூலம் அ.சா.ஆ.2. எங்களை தாக்கிய கத்திகளை காட்டினால் அடையாளம் சொல்ல முடியும். நீதிமன்றத்தில் காண்பிக்க கூடிய கத்தி 1வது எதிரி நேசமணி, நவீன் குமாரை குத்த பயன்படுத்திய கத்தி அது சா.பொ.3, அது இரும்பு பூண் போட்ட கத்தி. மற்றொரு பெரிய கத்தி மரக் கைப்பிடி போட்டது அது கார்த்திக் பயன்படுத்தியது, அந்த கத்தியை கொண்டுதான் என்னை அவர் குத்தினார். அந்த கத்தி சா.பொ.4. காலையில் இறந்து போன நவீன் குமார் மது அருந்த சென்ற இடத்தில் நடந்த தகராறு காரணமாக அதன் தொடர்ச்சியாக தான் இந்த சம்பவம் நடைபெற்றுள்ளது.

12 நீதித்துறை நடுவர் வந்து என்னை மருத்துவமனையில் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தபோது நான் அவ்வளவாக பேசும் நிலையில் இல்லை. காயங்கள் காரணமாக என்னை தாக்கிய நபரின் பெயரும், நவீன் குமாரை தாக்கிய நபரின் பெயரை மட்டும் நான் குறிப்பிட்டு சொன்னேன். எனக்கு எதிரிகள் நான்கு பேர் மட்டுமே அந்த சமயத்தில் என்னால் குறிப்பிட முடிந்தது மற்ற மூன்று எதிரிகளின் பெயர்களை நான் குறிப்பிடவில்லை, என்னால் அவ்வளவாக பேச இயலவில்லை என்பதால் நான் அந்த விபரங்களை குறிப்பிட்டு சொல்லவில்லை. நவீன்குமாரை குத்திய பிறகு எல்லா எதிரிகளும் சேர்ந்து கல்லைக் கொண்டு எங்களை தாக்கினார்கள் என்ற விபரத்தை நான் நீதித்துறை நடுவர் என்னை விசாரிக்கும் போது சொல்லியுள்ளேன். நான் மருத்துவமனையில் எத்தனை நாட்கள் இருந்தேன் என்றால் 7–8 நாட்களுக்கு மேல் இருந்தேன். மருத்துவமனை இருந்த நாட்களில் எனக்கு பகல், இரவு தெரியாததால் எவ்வளவு நாட்கள் இருந்தேன் என்று எனக்கு சரியாக தெரியவில்லை. சம்பவ இடமான சுடுகாட்டு நிழற்குடை அருகில் இரண்டு மின் விளக்குகள் உள்ளதால் அந்த இடம் வெளிச்சமாகத்தான் இருந்தது.

**வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணையானது ஒத்திவைக்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SWARNAM J NATARAJAN
Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2025.10.06 18:17:54 +0530

முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
தேனி.